பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 12 2024 7 15

தலைப்புச் செய்திகள் -

1. பழங்குடியினருக்கான மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. முப்படை வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் கொடிநாள் நிதிக்கு தாராளமாக நிதி உதவி அளிக்குமாறு பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
3. நாட்டில் பல மொழிகள் பேசும் மக்கள் அனைவரும் ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற ஒருமைப்பாட்டு உணர்வுடன் திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.
4. தென்கொரியாவில் அந்நாட்டு அதிபர் **Yoon suk yeol**-ஐ பதவி நீக்கம் செய்வதற்கு கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்தது.
5. குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அன்மோல் கார்ப் இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

பழங்குடியினருக்கான மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஒடிஸா மாநிலத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள அவர், வடக்கு ஒடிஸாவில் ஆறாயிரத்து 294 கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று ரயில்வே திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

பின்னர் பழங்குடியினர் மேம்பாட்டு ஆராய்ச்சி மையம் உள்ளிட்ட திட்டங்களையும் தொடங்கி வைத்து பேசிய குடியரசுத் தலைவர், இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள மூன்று ரயில்வே திட்டங்கள் மையூர்பஞ்ச் கெந்துஜார் மாவட்ட மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பை பூர்த்தி செய்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த ரயில்வே திட்டங்கள் ஒடிஸா மாநித்தையும், ஜார்க்கண்டையும் இணைப்பதாக அவர் கூறினார்.

உள்ளூர் மக்களுக்கு குறைந்த செலவில் ரயில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் இந்த மூன்று ரயில் திட்டங்களும் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புக்களையும் அளித்து, தொழில்துறை மேம்பாட்டுக்கு உதவிடும் என்றும் அவர் கூறினார்.

அண்மையில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒடிஸா மாநிலத்தில் இந்த மூன்று ரயில் திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.,

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று தமது ஐந்து நாள் பயணத்தை முடித்துக் கொண்டு புதுதில்லி திரும்பினார்.

[]<<<>>>[]

கொடிநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், முப்படை வீரர்களின் வீரத்தையும், உறுதிப்பாட்டையும், தியாக உணர்வையும் வெளிப்படுத்தும் நாளாக கொடிநாள் திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

வீரர்களின் தைரியத்தையும், தியாக உணர்வையும் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் போற்ற வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

கொடிநாள் நிதிக்கு மக்கள் தாராளமாக நிதியை வழங்கிட வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டார்,

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி விடுத்துள்ள கொடிநாள் செய்தியில், தன்னலமற்ற வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் அவர்களின் குடும்பத்தினருக்காக உருவாக்கப்பட்டுள்ள கொடிநாள் நிதிக்கு தமிழக மக்கள் தாராளமாக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே-யிடம் கொடிநாள் நிதி வழங்கினார்.

[]<<<>>>[]

2047-ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் கடல்சார் துறையில் இந்தியா முதல் பத்து நாடுகளின் பட்டியிலில் இடம்பெறும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னை காமராஜர் துறைமுகத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்று அவர் பேசினார்.

கடல்சார் துறையில் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு கப்பல் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேம்படுத்தவும், சரக்கு கையாளும் திறனை உயர்த்தவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதகாவும் அவர் தெரிவித்தார்.

கடல்சார் துறையில் கட்டுமானப் பணிகள் தரமாகவும், குறித்த நேரத்தில் முடிப்பதற்கும் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் கடல்சார் தொடர்பான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில் மத்திய அரசுக்கு அனைத்து ஒத்துழைப்பையும் தமிழக அரசு அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக சென்னையில் உள்ள தென்னிந்திய ஹிந்தி பிரச்சார சபையின் 83-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியருக்கு பிரவின், விஷாரத் பட்டங்களை திரு சர்பானந்த சோனாவால் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், நாட்டில் பல மொழிகள் பேசும் மக்கள் அனைவரும் ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற ஒருமைப்பாட்டு உணர்வுடன் திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

தென்மாநிலங்களில் ஹிந்தி மொழியின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் ஐந்து பேருக்கு விருதுகளை வழங்கி அவர் கௌரவித்தார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக சி சுப்ரமணியம் ஆற்றிய அரும் பணிகளையும் திரு சர்பானந்த சோனாவால் நினைவு கூர்ந்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பெஞ்சால் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஏழு பேர் கொண்ட மத்திய குழுவினர் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இன்று காலை விழுப்புரம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட இந்த குழுவினர், மாலையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர்.

திருக்கோவிலூர் நகராட்சி மன்றத்தில் அனைத்துத்துறை அதிகாரிகளுடன் மத்திய குழுவினர் புயல் பாதிப்பு குறித்து ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஐ நா-வின் போதைப்பொருள் மருந்துகள் அமைப்பின் 68-வது கூட்டத்தின் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ஐ நா தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வியன்னாவில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கான தலைமைப்பொறுப்பை ஐ நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு ஷம்பு குமரன் ஏற்றுக் கொண்டார்.

ஐ நா-வின் உறுப்பு நாடுகளின் மருந்து பொருட்கள் துறையில் நடைமுறைப்படுத்தப்படும் முக்கிய கொள்கை முடிவுகள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் ஐ நா-வின் இந்த அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.,

இந்த அமைப்பின் கூட்டத்திற்கு இந்தியா தலைமை தாங்குவது இதுவே முதல் முறையாகும்.

இந்தியாவின் தலைமைத்துவத்தில் உலகின் தெற்கு நாடுகள் மற்றும் வளரும் நாடுகளின் நலன் சார்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தென்கொரியாவில் அந்நாட்டு அதிபர் **Yoon suk yeol**-ஐ பதவி நீக்கம் செய்வதற்கு கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்தது.

அந்நாட்டில் ராணுவ சட்டத்தை அமல்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

சியோல் தேசிய சபையில் இந்த தீர்மானத்தின் மீது கொண்டு வரப்பட்ட வாக்கெடுப்பில் தீர்மானம் வெற்றிபெறுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்ற நிலையில் மொத்தம் உள்ள 300 உறுப்பினர்களில் 200 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்பட்டது.

அதிபரின் மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர். மூன்று பேர் மட்டும் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாக்கையும் சேர்த்து மொத்தம் 192 வாக்குகள் மட்டுமே அதிபரின் பதவி நீக்க தீர்மானத்துக்கு ஆதரவாக கிடைத்தன.

இதனையடுத்து தென்கொரிய அதிபர் திரு **Yoon suk yeol**- தமது பதவியில் நீடிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அன்மோல் கார்ப் இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர் 21-19, 21-17 என்ற செட் கணக்கில் சக நாட்டு வீராரான மான்சி சிங்கை வென்றார்.

இரட்டையர் பிரிவில் அஸ்வினி பொன்னப்பா – தானிஷா கிராஸ்டோ இணையும் இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை 21-14, 21-14 என்ற நேர் செட்டில் சீன இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 337 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 180 ரன்

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டி மஸ்கட்டில் இன்று தொடங்கியது.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – பங்ளாதேஷை எதிர்கொள்கிறது.

***End of News***